

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகராட்சி ஆவடி தமிழ்நாடு ஹவுசிங் போர்டு குடியிருப்பில் அமைந்துள்ள வார்டு கழகச் செயலாளர் வழக்கறிஞர் ரவிச்சந்திரன் அவர்களின் புதிய வழக்கறிஞர் அலுவலகத்தை மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்தார் நிகழ்ச்சியில் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ் , பகுதி கழக செயலாளர்கள் ஜி.ராஜேந்திரன் பொன் விஜயன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத், என்.பி.மாரிமுத்து, உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (29.5.2025) சென்னை, ஓட்டேரி எம்.கே.டி. மஹாலில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் சத்தியவாணி முத்துநகர் திட்டப் பகுதி 54 பயனாளிகளுக்கு குடியிருப்பு ஒதுக்கீடு ஆணைகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா. திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் இளம்பருதி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.புனிதவதி எத்திராஜ், திருமதி.ரமணி லோகேஷ். எம்.இசட்ஆசாத், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் சாமிகண்ணு, தமிழ்வேந்தன், டாக்டர் யாழினி மற்றும் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு! முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்!

# கலைஞர் நகர் வடக்குப் பகுதி முழுவதும் கழகக் கொடியேற்றி நலஉதவி வழங்கல்!

## பகுதிச் செயலாளர் மு.இராசா எம்.சி. அறிவிப்பு!

சென்னை,மே.30-

கலைஞர் நகர் வடக்கு பகுதி செயலாளர் மு. இராசா எம்.சி., அறிவிப்பு வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு கலைஞர் நகர் வடக்குப் பகுதி முழுவதும் கழகக் கொடியேற்றி நலஉதவி வழங்கல் நிகழ்ச்சி:

**127வது வட்டம்**

தலைமை : பொன். லோகு வ.செ

காலை 7 மணிக்கு

வட்ட கழக அலுவலக கழக கொடியேற்றி, இனிப்பு வழங்கி 10 இடங்களில் காலை சிற்றுண்டி வழங்கி, மதிய உணவும் பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கியும், இனிப்புகள் வட்ட கழகம் முழுவதும் கொடியேற்றி விழா கொண்டாடப்பட உள்ளது.

**127வது அ வட்டம்**

தலைமை : எஸ். மைக்கேல் வ.செ

காலை 7.30 மணிக்கு

சின்மயா நகரில் கழக கொடியேற்றி, இனிப்பு வழங்கி காலை சிற்றுண்டி 10 இடங்களில் வழங்கி, மதிய உணவும் பல்வேறு இடங்களில் இனிப்பு வழங்கியும் வட்ட கழகம் முழுவதும் கொடியேற்றி விழா கொண்டாடப்பட உள்ளது.

**128வது வட்டம்**

தலைமை : மு.கோவிந்தராசன் வ.செ

காலை 7.30 மணிக்கு

வட்ட கழக அலுவலகத்தில் கழக கொடியேற்றி, இனிப்பு வழங்கி கேக் வெட்டி, கழக தோழர்களுக்கும், பொது மக்களுக்கும் காலை சிற்றுண்டியும், 10 இடங்களில் வழங்கப்படும். மதிய உணவும் பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு புத்தகம் வழங்கி ஒலி பெருக்கி அமைத்து விழா கொண்டாடப்பட உள்ளது.

**128வது அ வட்டம்**

தலைமை : வீ.ஏ.ராஜா வ.செ

காலை 7.45 மணிக்கு

வட்ட கழக அலுவலகத்தில் கழக கொடியேற்றி, இனிப்பு வழங்கி வட்ட கழகம் முழுவதும் 10 இடங்களில் காலை சிற்றுண்டி வழங்கி, மதிய உணவும், பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு புத்தகம் வழங்கி ஒலி பெருக்கி அமைத்து விழா கொண்டாடப்பட உள்ளது.

**129வது வட்டம்**

தலைமை : எஸ். பாஸ்கரன் வ.செ

காலை 8.00 மணிக்கு

வட்ட கழகம் முழுவதும் கழக கொடியேற்றி, இனிப்பு வழங்கி 10 இடங்களில் காலை சிற்றுண்டி வழங்கி, கொடியேற்றி இனிப்பு, மதிய உணவும் பள்ளி குழந்தை களுக்கு நோட்டு புத்தகம் வழங்கி வட்ட கழகம் முழுவதும் விழா கொண்டாடப் பட உள்ளது.

**129வது அ வட்டம்**

தலைமை : அ.பாபு வ.செ

காலை 8.15 மணிக்கு

வட்ட கழகம் முழுவதும் கழக கொடியேற்றி, இனிப்பு வழங்கி காலை சிற்றுண்டி வழங்கி 10 இடங்களில் வழங்கி, கழக கொடியேற்றி இனிப்பு, மதிய உணவு வழங்கி, குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கி வட்ட கழகம் முழுவதும் விழா கொண்டாடப்பட உள்ளது.

கலைஞர் நகர், வடக்கு பகுதி கழகத்தின் சார்பில் அனைத்து வட்டங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளில் மாவட்ட கழக பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# “அன்னம் தரும் அமுதகரம்” 99வது நாள்!

## வில்லிவாக்கம் கிழக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,மே.30-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 99 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு இன்று (29.5.2025) வில்லிவாக்கம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 96- பாளையகார தெரு புதுத்தெரு சந்திப்பு. 2) வட்டம் 98 ஆ- கலைஞர் கருணாநிதி நகர் 1வது தெரு ,11 வது தெரு சந்திப்பு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்





தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்: அ. வெற்றி அழகன், வே.வாசு, கூ.பீ.ஜெயின், லதா வாசு எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வில்லிவாக்கம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எ.வேதா, சீ.விக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாள், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ)உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகு பாபு இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் : சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு நடந்த

# ‘சமத்துவம் காண்போம்’ போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள்!

## அமைச்சர் மு.பெ. சாமிநாதன் வழங்கி சிறப்பிப்பு!

சென்னை.மே.30-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் நடத்திய “சமத்துவம் காண்போம்” போட்டிகளில் வெற்றிபெற்ற 47 பேருக்குப் பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 13.04.2022 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி எண்.110-ன் கீழ், வடக்கே உதித்த சூரியன், மலர் பூக்க வந்த பகலவன், நமது அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாளை, ‘சமத்துவ நாளாக’ கொண்டாடுவது என்று தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது என அறிவித்தார்கள். இதனடிப்படையில், தமிழ்நாட்டில் அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாள், ஆண்டுதோறும் சமத்துவ நாளாகக்கடைப்பிடிக்கப் படுகிறது.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் வாயிலாக “சமத்துவம் காண் போம்” என்ற தலைப்பில் பொதுமக்கள் மற்றும் மாணாக்கர்கள் பங்கு பெறும் வகையில் சமூக ஊடகங்களான எக்ஸ் தளம் (X), படவரி (Instagram), முகநூல் (Facebook), புலனம் (WhatsApp), வலையொளி (YouTube) வாயிலாகப் போட்டிகள் நடத்தப் பட்டன.

இதுவரை நடத்தப்பட்ட போட்டிகளில், தமிழ்நாடு அரசின் முதன்மையான திட்டங்கள் குறித்த ரீல்ஸ் போட்டி, போதையில்லாத் தமிழ்நாடு போட்டிகள், திருக்குறள் போட்டிகள், பொங்கல் - உழவும் மரபும் கலைப் போட்டிகள், லவ் டிஎன் (LOVE TN) போட்டிகள், ‘செந்தமிழ்நாட்டு தமிழச்சியே’ போட்டிகள் என 6 போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் 39,479 பேர் மின்னஞ்சல் மூலம் தங்கள் படைப்புகளை அனுப்பிக் கலந்து கொண்டனர். அவர்களில் 207 பேர் வெற்றி பெற்றவர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதங்கங்கள் வழங்கி வாழ்த்துக்கள் கூறினார்.

இதனைத் தொடர்ந்து, தற்போது நடத்தப்பட்ட “சமத்துவம் காண்போம்” என்ற தலைப்பில் ‘ஒரு கதை சொல்லட்டுமா’ என்ற போட்டி, ரீல்ஸ் போட்டி, சமூக ஊடகங்களின் மூலம் விழிப்புணர்வு, ஓவியம் / வரைதல் போட்டி, வினாடி-வினாப் போட்டி, மீம்ஸ் போட்டி, வலையொலி போட்டி, உரிமைகளுக்கான ராப் போட்டி, செல்பி மற்றும் ஹேஷ்டேக் போட்டி என 9 பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டியாளர்கள் மின்னஞ்சல் மற்றும் விரைவு துலங்கள் குறியீடு (QR CODE) வாயிலாகப் படைப்புகளை அனுப்பிக் கலந்து கொண்டனர். அதில் ஒரு கதை சொல்லட்டுமா என்ற போட்டியில் 282 பேரும், ரீல்ஸ் போட்டியில் 36 பேரும், சமூக ஊடகங்களின் மூலம் விழிப்புணர்வு போட்டியில் 20 பேரும், ஓவியம் / வரைதல் போட்டியில் 1388 பேரும், வினாடி-வினா போட்டியில் 2201 பேரும், மீம்ஸ் போட்டியில் 555 பேரும், வலையொலி போட்டியில் 41 பேரும், உரிமைகளுக்கான ராப் போட்டியில் 23 பேரும், செல்பி மற்றும் ஹேஷ்டேக் போட்டியில் 124 பேரும் என இந்த 9 பிரிவுகளில் 4670 பேர் கலந்து கொண்டனர். இவர்களில் 47 பேர் வெற்றி பெற்றவர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர். இந்த வெற்றியாளர்கள் குறித்த விவரம் 26.05.2025 அன்று TNDIPR சமூக வலைதள கணக்குகளில் வெளியிடப்பட்டது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (29.05.2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில் நடத்தப் பட்ட “சமத்துவம் காண் போம்” போட்டிகளில் வெற்றிபெற்ற 47 பேருக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் வே.ராஜாராமன், இ.ஆ.ப, கூடுதல் இயக்குநர் (செய்தி) எஸ்.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்கள் மற்றும் சமூக ஊடக மைய அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





வேளாண்மை துறை சார்பில் உழவரைத் தேடி – வேளாண்மை உழவர் நலத்துறை திட்ட துவக்க விழா தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்ததை தொடர்ந்து பிற்பகலில் திருவள்ளூர் தொகுதி பூண்டி மேற்கு ஒன்றியம் நெமிலியகரம் கிராமத்தில் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் உழவுத் தொழிலுக்கான உபகரணங்கள் மற்றும் விவசாய இடுபொருட்கள் வழங்கினார். நிகழ்ச்சியில் வேளாண் உதவி இயக்குனர் இளையராஜா, துறை சார்ந்த அலுவலர்கள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தா. மோதிலால், ஒன்றிய அவைத் தலைவர் பட்டரை கே. பாஸ்கரன், காஞ்சிபாடி பி. சரவணன், கழக மூத்த முன்னோடி பெரியவர் ராஜேந்திரன், கிளைக் கழக செயலாளர் ஆதி நாராயணன் உள்ளிட்ட கிளைக் கழக நிர்வாகிகள், விவசாய பெருமக்கள் உடனிருந்தனர்.

### சைதை மேற்கு – 142வது வட்டத்தில் கேபிள் எம்.முருகன் ஏற்பாட்டில்

### பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு திருவுருவச் சிலைக்கு மாலை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அணிவிக்கிறார்!

சென்னை,மே.30-

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் ஜுன் 3 அன்று 102வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி 142வது வட்ட திமுக சார்பில் வட்ட துணை செயலாளர் கேபிள் எம்.முருகன் ஏற்பாட்டில், பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, பகுதி துணை செயலாளர் ஆர்.ரமேஷ், வட்ட கழக செயலாளர்கள் எம்.நாகா, எஸ்.பி.கோதண்டம் ஆகியோர் முன்னிலையில், திடீர்நகர் கே.தாஸ், கேபிள் காளி, ஆர்.தனா, எம்.மாதவன், ராஜேஸ்வரி, சுந்தரி, எம்.காளி, திராவிடமாரி, க.ஆனந்த், ஆகியோர் வரவேற்பில், 03.06.2025 (செவ்வாய்க்கிழமை) காலை 6 மணியளவில் சைதாப்பேட்டை அப்துல்ரசாக் தெருவில் உள்ள முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துகிறார்.

எனவே இந்நிகழ்விற்கு பொதுக்குழு உறுப்பினர்கள், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடிஎல்லப்பன், பகுதி கழக நிர்வாகிகள் த.சம்பத், கவிதாகௌதமன், வி.பி. ஜானகிராமான், கலைஇலக்கியப் பகுத்தறிவுப்பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, வட்ட கழக செயலாளர்கள் சை.மு. சேகர், அட்கோகமலநாதன், ந.தமிழரசு, மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர். கிருஷ்ணகுமார், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என். சிவமணி, பால்கார்ரவி, பொன்ஜெய்சிங், ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, ஜி.பாபு, ஆர்.எல்.காந்தன், த.மணி,

இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம் க.பிரபு, ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, இரா.வெங்கடேசன், எஸ். பரத்குமார், எம்.அருண், மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.எஸ்.மணி, ஏ.சந்தோஷ், டி.எஸ்.ரவிச்சந்திரன், எம்.சம்மந்தம், டி. தியாகு, கு.கார்த்திகேயன், மாவுமில் ஸ்ரீதர், தீ.ராஜ்குமார், தீனதயாளன், தமீம்அன்சாரி, புருசோத்தமன், தினகர், ஆர்ட்ஸ்குமார், எம்.மாறன், கே.பிரபு, பிரஸ்கார்த்திக், வெ.கிஷோர்குமார், துரைராஜ், சிற்றரசு, நரேஷ்குமார், ரவீந்திரகுமார், ஆர். ஜி.ஸ்டாலின், எம்.ஜி.மதிவாணன், தமிழ்வேல், ஸ்டெல்லாமேரி, செல்வி, செண்பகம், செல்வராணி, பகுதி அமைப்பாளர்கள் ஆர்.எஸ்.ரமேஷ், ஜி.ஜே. மோசஸ், ஆர்.ஜி.கற்பகம், எல்.கார்த்திக், மல்லிகா, கோயில்மணி, ஆட்டோ ஜான்,

சார்புசரவணன், வைரவமூர்த்தி, இரா.பாபு, பிடிசிகுமார், பூ.பாஸ்கர், த.ஜெயராமன், ஆர்.தனசேகரன், கோகுல்குமார், மாரியப்பன், விக்னேஷ், விவேக் செல்வம், ஆர்.துரைராஜ், ஜீவபிரபாகரன், வட்டகழக நிர்வாகிகள் ஆர்பார்முனுசாமி, எப்.சாகுல்அமீது, எம். கதிர், ஆர்.கோபி, கே.முருகேசன், வி.பி.காந்தி, கே.கசாலி, ஆர்.மோகன், கே.விஜய் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்க உள்ளனர்.





திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, சுண்ணாம்புகுளம் ஊராட்சியில் ரூபாய் 8.00 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து முன்னாள் மாவட்ட செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் முன்னிலையில் திருவள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில் கல்வெட்டு திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், எம்.எல்.ரவி, ந.பரிமளம், இரா.அறிவழகன், ஏ.வி.ராமமூர்த்தி, மு.பாஸ்கர், வி.பி.ரவிக்குமார், எஸ்.ராமஜெயம், எம்.கேசவன், திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி அமைப்பாளர் ஏ.ஜி. சிதம்பரம், வழக்கறிஞர் எஸ்.சி.பல்லவன், எஸ்.எம்.ரவி, சிவகுமார், வேதாச்சலம், ஜெயராமன், எம். ஜெயசந்திரன், காளத்தி, சுகுமணிமேகலை, பா.பரத்குமார், இளவரசன், ப.அறிவழகன், நரேந்திரன், மெய்யழகன், சுந்தரி அன்பு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.